திட்டத்தை நிறைவேற்ற ஒரு கால வரையறையை நிர்ணயித்து அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, சின்னக் கரை ஓடைத் திட்டம் பற்றிய செயற்குறிப்புகள் வடிவாய் திட்டம் வளர்ச்சித் துறையிடமிருந்து இந்த அரசுக்கு இன்னும் அறிக்கை வர வேண்டியிருக்கிறது. அரசுக்கு அறிக்கை வந்த பிறகு, அரசினுடைய நிதி ஒதுக்கலுக்குப் பிறகு விரைந்து எப்பொழுது முடிக்கப்படலாம் என்று தெரிவிக்க முடியும்.

மருதம்புத்தூரில் குடிநீர் வழங்கல்

*2058—திரு. பி. எச். பாண்டியன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பா சமுத்திரம் தாலுகாவில் உள்ள மருதம்புத்தூரில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 10 குதிரை சக்தி திறன் உள்ள மோட்டார் இணைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மருதம்புத்தூர் என்ற கிராமம் 4,000 மக்கள் வாழக்கூடிய கிராமம் ஆகும். அங்கே வீதிகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் முன்பு கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரை மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றி ஒரிரு இடங்களுக்கு மட்டும் விநியோகிக்கிறார்கள். ஆகவே, எல்லாத் தெருக்களுக்கும் தண்ணீர் வழங்கக்கூடிய திட்டத்தை வகுப்பார்களா அமைச்சரவர்கள் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கிராமத்தில் 1985–86–இல் குடிநீர் வழங்குவதற்காக 5.21 இலட்சம் செலவிலே திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அப்பொழுது நிறைவேற்றப்பட்ட அந்தத் திட்டத்தில் நீர் ஆதாரம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் நிறைவேற்றப்பட்டது.

1990 மார்ச் 20]

இருந்தாலும், அந்த நீர் ஆதாரம் இப்பொழுது குறைந்திருக்கின்ற காரணத்தினால் அங்கே மேலும் நீர் வேண்டுமென்ற உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அங்கே மேலும் கைப்பம்புகளைப் போட முடியுமா என்பதைப்பற்றியும் அல்லது தாமிரபரணி ஆற்றிலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் குடிநீர் வருகின்றபொழுது அந்த இடத்தையும் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதையும் பரிசீலித்து இந்த அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.55 மணி

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாகுடி அருகில் நல்லம்தட்டை என்ற ஒரு ஊரில் இருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தயாரித்து சங்கரன் கோவில் ஆலங்குளம் பகுதிக்கு ஒரு திட்டத்தை வகுத்து இருப்பதாக அறிகின்றேன். அப்படி திட்டத்தை நிறைவேற்றும்போது, மருதமுத்தூர், ஓடக்கரை, துலுக்கப்பட்டி, குமாரசாமிபுரம், காத்தபுரம், ஓடைமரிச்சான் பெயர்களை எல்லாம் அமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கண்டப்பட்டி, புதுப்பட்டி, காசிநாதபுரம், இடைக்கால், காலத்திமடம், பொல்லக்கால், பொதுக்குடி, ஆல்வார், துலுக்கப்பட்டி, பாறையாங்குறிச்சி, அடைச்சாணி போன்ற கிராமங்கள்.... ..(மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியில் இத்தனை ஊர்கள் தானா? இன்னும் இருக்கிறதா?

திரு. பி.எச். பாண்டியன் : அத்துணை ஊர்களுக்கும். தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரை, கட்டிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் ஏற்றி வழங்குவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ச. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி அரசினர் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்குப் புதிதாக கட்டிடம் கட்டுதல்.

*2952 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்காசி அரசினர் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?